பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 164

சனிக்கிழமை
10 மே 2025

சித்திரை 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056



# என்.பி.பி.யுடன் இணையோம் தமிழரசு உறுதியான முடிவு!

## சீ.வீ.கே.சிவஞானம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 10

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியத்தைக் கைவிட்டு ஒருபோதும் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஆட்சியமைக்காது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

☞ 11

வடமாகாணத்தில்

## புலிகளின் புகழ்பாடியும் அரசாங்கம் படுதோல்வி

### விமல் வீரவன்ஸ கிண்டல்

கொழும்பு, மே 10

தங்களை புலிகளுக்கு நிகரானவர்களாகக் காண்பித்தும், பிரபாகரனின் பெயரை வைத்து பரப்புரை செய்தும்கூட தேசிய மக்கள் சக்தியை வடக்கு மக்கள் விரட்டியடித்துள்ளனர் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

☞ 11

## புலிகள் வீழ்த்தப்பட்ட நாளில் கோலாகலக் கொண்டாட்டம்

### விமல் வீரவன்ஸ அறிவிப்பு ஜனாதிபதிக்கும் அழைப்பு

கொழும்பு, மே 10

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட நாளை இம்முறை கோலாகலமாகக் கொண்டாடவேண்டும். இந்தக் கொண்டாட்டங்களில் ஜனாதிபதி அநுரவும் இணைந்துகொள்ள வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடை

☞ 11



## விமானப்படையின் ஹெலி வீழ்ந்து நொருங்கியது

### மாதுறு ஓயாவில் பரபரப்பு ஆறு பேர் உயிரிழப்பு

கொழும்பு, மே 10

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று நேற்றுக் காலை மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஆறுபேர் உயிரிழந்துள்ளனர்.

ஹிங்குராக்கொட விமானப் படைத் தளத்திலிருந்து

☞ 11

## தேர்தல் செலவு; அறிக்கை வழங்குக

விரிவு பக்:-02

## டெங்கு உயர்வு

விரிவு பக்:-03

## தமிழ்க்கட்சிகளின் இணைவு இன்று தவிர்க்கமுடியாதது!

### செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 10

மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து செயற்படுவதே இன்று காலத்தேவையாகவும் சாலச் சிறந்ததாகவும் காணப்படுகின்றது என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்

☞ 11

## மாணவனை தாக்கிய ஆசிரியர் கைதானார்

யாழ்ப்பாணம், மே 10

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனியார் கல்வி நிலையமொன்றில், மாண

☞ 11



## வீடா? சைக்கிளா? இன்று அறிவிப்பு?

### சங்குக் கூட்டணியின் இணைத்தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம், மே 10

இலங்கைத் தமிழரசுக் கட்சியுடனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் கலந்துரையாடி, எதிர்வரும் சனிக்கிழமை (இன்று) அல்லது ஞாயிற்றுக்கிழமையன்று (நாளை) யாருக்கு ஆதரவு என்பதை அறிவிப்போம் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல உள்ளூராட்சி சபைகளில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஆதரவு எந்தத் தரப்புக்குக் கிடைக்கின்றதோ அந்தக் கட்சியே ஆட்சியமைக்கும் என்ற நிலையே காணப்படுகின்றது. இதனால், ஜனநாய

☞ 11

### முச்சந்தி முரளி

'பனையில தேள் கொட்டினா தென்னையில நெறி போகுறமாதிரி பாகிஸ்தானில சண்டை நடக்க தென்னிலங்கையில ஹெலி விழுகுது பாருங்கோ'

## மயங்கமடைந்து வீழ்ந்து குடும்பத்தலைவர் சாவு!

யாழ்ப்பாணம், மே 10

குடும்பத்தலைவர் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும்

☞ 11

உள்ளாட்சித் தேர்தல்

## சதுரங்க ஆட்டத்தை ஆரம்பித்தார் சஜித்!



கொழும்பு, மே 10

உள்ளூராட்சிசபைகளில் பரந்துபட்ட இணக்கப்பாட்டுடன் ஆட்சியை அமைப்பதற்கான நடவடிக்கையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீவிரம் காட்டியுள்ளது.

☞ 11



| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 09.05.2025 | திகதி 09.05.2025 | திகதி 09.05.2025 | திகதி 09.05.2025 | திகதி 09.05.2025 | திகதி 09.05.2025 | திகதி 09.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4068 | சீட்டிழுப்பு இலக்கம் 1135 | சீட்டிழுப்பு இலக்கம் 0094 | சீட்டிழுப்பு இலக்கம் 2174 | சீட்டிழுப்பு இலக்கம் 5826 | சீட்டிழுப்பு இலக்கம் 1856 | சீட்டிழுப்பு இலக்கம் 0401 |
| ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கினம் மேஷம் | ஆங்கில எழுத்து C | ஆங்கில எழுத்து K | ஆங்கில எழுத்து S | ஆங்கில எழுத்து L | ஆங்கில எழுத்து S |
| | | | சுப்பர் இலக்கம் 26 | | | |
| வெற்றி இலக்கங்கள் 09 38 58 63 | வெற்றி இலக்கங்கள் 35 38 53 58 | வெற்றி இலக்கங்கள் 1 6 5 5 | வெற்றி இலக்கங்கள் 13 30 50 57 | வெற்றி இலக்கங்கள் 3 8 2 9 6 1 | வெற்றி இலக்கங்கள் 33 58 68 77 | வெற்றி இலக்கங்கள் 2 9 6 1 |
| விசேட எழுத்து F | | | | | விசேட எழுத்து L | |

# வாக்குகளை இலக்காக வைத்து வடக்கில் சேவையாற்றவில்லை

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

**கொழும்பு, மே 10**

**தேசிய மக்கள் சக்தி உணர்வுபூர்வமாகவே வடக்குக்கு சேவையாற்றுகின்றது. மாறாக வாக்குகளை இலக்குவைத்து எமது கட்சி செயற்படவில்லை என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

காணாமற்போய் மீண்டும் கிடைப்பவருக்கே வீடுகளில் கூடுதலாக கவனிப்பு இடம் பெறும். ஏனெனில் அவர்கள் பட்ட கஷ்டம், வலி பெரும் வேதனைமிக்கதாக இருந்திருக்கும். வடக்கு என்பதும் இலங்கைக்கு கிடைக்காமல் இருந்த பிள்ளைதான். தற்போது அந்தப்பிள்ளை இலங்கைக்குக் கிடைத்துள்ளது. போரால் வடக்கு மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

அதனால் தேசிய நல்லிணக்கத்துக்காக மட்டும் அல்ல அபிவிருத்திக்காகவும் எம்மால் செய்யக்கூடிய அனைத்தையும் செய்வோம்.

இதை வாக்குகளுக்காக நாம் செய்யவில்லை. நாம் சேவை செய்தால் வாக்கு என்பது தாமாகவே கிடைக்கும். உணர்வுபூர்மாகவே நாம் சேவையாற்றுகின்றோம்.

வடக்கு மாகாணத்தில் மன்னாரில் எமக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைத்துள்ளது. வவுனியாவிலும் வெற்றி கிடைத்துள்ளது. வடக்கில் 150 உள்ளூராட்சி உறுப்பினர்கள் கிடைத்துள்ளனர். இதற்கு முன்னர் அவ்வாறு இருக்கவில்லை. கிழக்கிலும் 216 உறுப்பினர்கள் கிடைத்துள்ளனர் - என்றார். (எ-44)

### சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 09.05.2025 | வெள்ளிக்கிழமை | 0534 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| P | 3 4 7 6 5 1 |

### Super Ball

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 09.05.2025 | வெள்ளிக்கிழமை | 2800 | B | 03 07 26 49 |

### சனிதா

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 09.05.2025 | வெள்ளிக்கிழமை | G | 29 58 60 75 | 4961 |

### SASIRI

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 09.05.2025 | வெள்ளிக்கிழமை | 0679 | 03 06 14 |

### லக்ன ராசி

| திகதி | தினம் | மேஷம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 09.05.2025 | வெள்ளிக்கிழமை | ♈ | 13 25 49 52 | 4512 |

### KAPRUKA

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 09.05.2025 | வெள்ளிக்கிழமை | A | 20 | 26 43 50 67 | 1976 |

### அத கோடிபதி

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 09.05.2025 | வெள்ளிக்கிழமை | A | 23 52 54 66 | 2626 |

## 2015 - 2024 வரை 2,250.04 பில்லியன் அச்சிடல்

கொழும்பு, மே 10

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற காலப்பகுதிவரையில் 2,250.04 பில்லியன் ரூபா அச்சிடப்பட்டுள்ளது என்று பிரதி அமைச்சர் ஹர்ஷண சூரியபெரும தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஆளுந்தரப்பு உறுப்பினர் ரவீந்திர பண்டாரவினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

## சபைகளில் இணைந்து ஆட்சியமைக்க

# கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு

மட்டக்களப்பு, மே 10

தமிழர்களின் ஆட்சியை உறுதிசெய்வதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குக் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு பகிரங்க அழைப்பு விடுக்கின்றது என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிசபைகளில் எமக்கு 37 ஆசனங்கள் கிடைத்துள்ளன. தனிப்பட்ட அல்லது கட்சி விருப்பு வெறுப்பிற்கு அப்பால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் அனைவரும் ஒருமித்துப் பயணிக்கவேண்டும் என்பதை மக்கள் உணர்த்தியுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு தமிழர்களின் ஆட்சியை உறுதிசெய்வதற்காக அழைப்பு விடுக்கின்றோம். ஒன்றாகப் பயணிக்கின்றபோது கோறளைப்பற்று வடக்கு, கோறளைப்பற்று, ஏறாவூர்ப்பற்று, மட்டக்களப்பு மாநகர சபை, மண்முனை தென் எருவில் பற்று, மண்முனை தென்மேற்கு மற்றும் போரதீவுப்பற்று ஆகிய உள்ளூராட்சிமன்றங்களிலும் ஆட்சியமைக்கமுடியும் - என்றார். (எ-இ)

# தேர்தல் செலவு அறிக்கை 28க்கு முன்னர் வழங்குக

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, மே 10




2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் தங்களின் பரப்புரை வரவு - செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளதாவது

2023ஆம் ஆண்டு தேர்தல் செலவின ஒழுங்குமுறைச் சட்டம் எண் -3இன் விதிகளின்படி வேட்பாளர்கள் தங்கள் நிதி வெளிப்படுத்தல்களைத் தயாரித்து சமர்ப்பிக்கவேண்டும். இந்த அறிக்கைகள் அந்தந்த தேர்தல் மாவட்டங்களின் தேர்தல் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

தேர்தல் செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான ஆணையகத்தின் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்தச் செயன்முறை இருக்கிறது - என்றார். (எ-இ)

# இந்தியா - பாகிஸ்தான் மோதல் இலங்கையைப் பாதிக்கலாம்

## வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, மே 10

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான போரால் இலங்கைக்கும் தாக்கம் ஏற்படக்கூடும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியா- பாகிஸ்தான் போரால் இலங்கைக்குத் தாக்கம் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாது. போர் உக்கிரமடைந்தால் இந்திய சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வரமாட்டார்கள். இந்தியா பொருளாதாரக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றக்கூடும். அதனால் இந்தியாவில் இருந்து பொருள்களை கொள்வனவுசெய்ய முடியாத நிலை ஏற்படக்கூடும். அதேபோல பாகிஸ்தானுடனும் பொருளாதார ரீதியிலான கொடுக்கல் - வாங்கல் உள்ளது. லாகூருக்கான விமானசேவை நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, இரு நாடுகளுக்கும் இடையிலான போர் உக்கிரமடைய, இலங்கைக்கும் பொருளாதார ரீதியிலான தாக்கங்கள் அதிகரிக்கும் - என்றார். (ச-44)

# இணைந்து ஆட்சியமைப்பதற்கு தமிழ்க்கட்சிகள் அழைப்பில்லை

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

**கொழும்பு, மே 10**

**வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைகளை இணைத்து நிறுவுவது தொடர்பாக தமிழ்க்கட்சிகள் உத்தியோகபூர்வமான எந்த அறிவித்தலையும் அரசாங்கத்துக்கு வழங்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் என்பன ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவையாகும்.

இந்த மூன்று தேர்தல்களிலும் மக்களின் நடத்தை வேறுபட்டதாகவே காணப்படும். 266 சபைகளை அரசாங்கம் கைப்பற்றியிருக்கிறது. வரலாற்றில் எந்தவொரு கட்சியும் இவ்வாறான வெற்றியைப் பெறவில்லை. வடக்கு, கிழக்கில் இணைந்து சபைகளை நிறுவுவது தொடர்பாக தமிழ்க்கட்சிகள் உத்தியோகபூர்வமாக எந்த அறிவித்தலையும் அரசாங்கத்துக்கு வழங்கவில்லை.

அதிகபட்ச சபைகளை நிறுவுவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என்றார். (எ-இ)



# சட்டவிரோத பீடி இலைகள் நீர்கொழும்பில் கைப்பற்றல்

கொழும்பு, மே 10

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட 325 கிலோகிராம் பீடி இலைகள் நீர்கொழும்பு கடற்பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த புதன்கிழமை இலங்கைக் கடற்படையின் தேடுதல் நடவடிக்கையின்போது அவை மீட்கப்பட்டன.

கடற்படையினரின் சோதனை நடவடிக்கைகள் காரணமாக கடத்தல்காரர்கள் அவற்றைத் தரையிறக்கமுடியாமல், கடலில் கைவிட்டுச் சென்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ச-125)

# பாப்பரசருக்கு அநுர வாழ்த்து

கொழும்பு, மே 10

கத்தோலிக்கத் திருச்சபையின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை 14ஆம் லியோவுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். திருத்தந்தை 14ஆம் லியோ உலகளாவிய கத்தோலிக்க சமூகத்தை வழிநடத்தும்போது அவர் வலிமையையும் ஞானத்தையும் பெற வேண்டும். உங்கள் தலைமை உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு நம்பிக்கையையும் உத்வேகத்தையும் கொண்டுவரட்டும் என்றும் ஜனாதிபதி தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



# டெங்கு உயர்வு



கொழும்பு, மே 10

நடப்பாண்டில் இதுவரை 19 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏழு பேர் உயிரிழந்துள்ளனர் என்று மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். எனவே பொதுமக்கள் நுளம்புகள் பரவும் இடங்களை அகற்றி சூழலைத் துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# வில்பத்தினூடான பாதை சட்டவிரோதமானது!

## நீதிமன்றம் தீர்ப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியில் வில்பத்து சரணாலயத்தை ஊடறுத்து புத்தளத்துக்கும் மன்னாருக்குமிடையே சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பாதை தொடர்பான வழக்கை உயர்நீதிமன்றம் முடிவுக்கு கொண்டுவந்துள்ளது.

இந்தச் சட்டவிரோத பாதையால் போக்குவரத்து நடைபெறும் பட்சத்தில் சரணாலயத்தின் இயற்கைச் சமநிலை பாதிக்கப்படும் எனவும், வனவிலங்குகள் இடம்பெயரும் எனவும் தெரிவித்து சுற்றுச்சூழல் அமைப்புகள் உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தன. கடந்த 15 வருட கால விசாரணைகளின் பின் வழக்காளிகளுக்குச் சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ச-25, 6)

# அபிவிருத்தித் திட்டங்களைச் சிறப்பாக முன்னெடுப்போம்

## சுலக்சன் தெரிவிப்பு

வேலணை மற்றும் வலி. கிழக்குப் பிரதேச சபைகளில் போட்டியிட்ட சுயேச்சைக் குழு இரண்டு சபைகளிலும் தலா ஒரு ஆசனத்தைப் பெற்றுள்ளது. இனிவரும் காலங்களில் அபிவிருத்தித் திட்டங்கள், வாழ்வாதார உதவிதிட்டங்கள் என்பவற்றை இரு சபைகளிலும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வேன் என்று தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: உள்ளூராட்சிசபைத் தேர்தலில், யாழ் . மாநகர சபை, வேலணை மற்றும் வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) ஆகிய சபைகளுக்கு நாம் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தோம். அதில் துரதிஷ்டவசமாக யாழ் . மாநகரசபைக்கான வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. எனினும் வேலணை மற்றும் கோப்பாய் சபைகளில் களமிறங்கிய சுயேச்சைக் குழு இரண்டு சபைகளிலும் தலா ஒரு ஆசனத்தைப் பெற்றுள்ளது. எமக்கு வாக்களித்தவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார். (ச-20)




அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாமாறேக்க, ஆனை மட்டும் கொஞ்சி விளையாடுமோ? அதுவும் அளவுக்கு மிஞ்சினால் ஏறிமிதிக்கத்தான் செய்யும். நாலைஞ்சு நாளைக்கு முந்தி யாழ்ப்பாணம் ரவுனுக்குக் கிட்டவா உள்ள பத்திரகாளி கோயில் மஞ்சத் திருவிழாவில ஆக்களுக்கு வேடிக்கை காட்டவெண்டு கொண்டுவந்த யானையொண்டு திடீரெண்டு கண்டபடி ஓடத்தொடங்கிட்டுது. நாலு வயதுக் குழந்தை ஒண்டுக்கும், ஒரு பிள்ளைத்தாச்சிக்கும், இன்னொரு பொம்பிளைக்கும் மதம் பிடிச்ச யானை மிதிச்சதில கடும் காயம். அதிலையும் ஒரு பொம்பிளைக்கு பாதம் சப்பளிஞ்சு போட்டுது. பிறகு கடும் கஷ்டப்பட்டுத்தான் யானையைப் பிடிச்சவையாம். இல்லாட்டி நிலைமை மோசமாப்போயிருக்கும். கோயில் திருவிழாவில கொளுத்தின வெடியாலையும், தீவட்டி நெருப்பையும் கண்டு வெருண்டதாலதான் இப்பிடி மதம் பிடிச்சமாதிரி ஓடின அந்த யானை ஆரையும் தூக்கியடிச்சிருந்தால் எலும்பு கூட மிஞ்சியிருக்காது. கன இடங்களில அப்பிடியான சம்பவங்கள் எல்லாம் நடந்துமிருக்குது. ஆனால் இஞ்ச ஏதோ தெய்வாதீனமா, பத்திரகாளியின்ர அருளாலையோ என்னவோ யானை மதம் பிடிச்சவுடன் ஓடினதே தவிர ஆரையும் தூக்கியடிக்கேலை எண்டு கோயிலில நிண்டவை சொல்லுகினம்.

உயிர்ப்பலி ஏற்படாட்டியும் இதை எங்கட ஆக்கள் ஒரு பாடமா எடுக்கோணும். கோயில் திருவிழா எண்டால் இப்பிடி லட்சக்கணக்கில காசைக் கரியாக்கி யானை, குதிரையைக் கொண்டந்து வித்தை காட்டுறதுதான் சிலர் பக்தி எண்டு நினைச்சுக்கொண்டிருக்கினம்போல. பெருமெடுப்பில திருவிழாச் செய்யுங்கோ. ஆரும் வேண்டாமெண்டு சொல்லேலை. ஆனால் ஆக்களின்ர உயிரோட விளையாடுற வேலையளை மட்டும் செய்யாதையுங்கோ. இப்பிடி யானையளைக் கொண்டுவாறது எண்டால் அதுக்குரிய மெடிக்கல் ரிப்போர்ட் செய்து, இன்னும் சில அனுமதியள் எடுக்கிறதோட, டொக்டர்மாரும், பொலிஸும் வந்து நிக்கோணும் எண்டு முந்தினா ஆளுநர் ஒருத்தர் உத்தரவு போட்டவர். ஆனால் இப்ப அந்த உத்தரவை ஒருத்தரும் மதிக்கிறமாதிரி தெரியேலை. அப்பிடி இந்த யானைக்கும் மெடிக்கல்செய்திருந்தால்இப்பிடி வெருண்டடிக்கிற குணத்தில நிக்குது எண்டு கண்டுபிடிச்சு, அதைக் கொண்டு வரமாலே விட்டிருக்கலாம்.

இனியாவது இப்பிடி யானையளைக் கோயிலுக்குக் கொண்டுவரேக்க, அதுக்கெண்டு இருக்கிற விதிமுறையளைக் கோயில்காரர் கடைப்பிடிக்கோணும். அப்பிடி இல்லாமல், இப்பிடி வேடிக்கை காட்டி, சனத்தின்ர வாயைப்பிளக்க வைக்க விரும்பினால், சிலவேளையளில ஏடகூடாம ஏதும் நடந்தபிறகு குய்யோ முய்யோ எண்டு கத்திப் பிரியோசனமில்லை. வெள்ளம் வரமுதல் அணைகட்டிப் பழகோணும். இல்லாட்டி ஆனையளைக் கொண்டந்து இப்பிடி அடிவாங்கிறது வழக்கமாப் போடும் கண்டியளோ

padsi@uthayan.com - பட்சி



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில்எதிர்பாராத ஆதாயம்ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பிற்பகலுக்குமேல்மற்றவர்களிடம்பேசும்போதுபொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** அனுகூலமானநாள். தாயின்விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையாக இருப்பது அவசியம். உடல்நலனில் கவனம்தேவை.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைக்கும்.

**கடகம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். நண்பர்களின் மூலம் எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சிதரும். வியாபாரத்தில் விற்பனையும் .இலாபமும் கூடுதலாக இருப்பது மகிழ்ச்சிதரும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம்தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள்.

**கன்னி:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும்.வியாபாரத்தில் சக வியாபாரிகளால் சிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**விருச்சிகம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும்நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபடவேண்டி இருக்கும். ஆனால், வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். வாழ்க்கைத்துணை நீண்டநாள்களாக கேட்டுக்கொண்டிருந்ததை வாங்கிக் கொடுப்பீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**கும்பம்:** புதியமுயற்சிகளைப்பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். தாயாரின் உடல்நலனில் கவனம்செலுத்தவும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் மேலோங்கும். முக்கிய முடிவு எடுக்க உகந்தநாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் தொடர்புகொண்டு பேசுவது மகிழ்ச்சியும் உற்சாகமும் தருவதாக இருக்கும்.



பளை இத்தாவில் தாயகம் முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்துக்கு ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் மற்றும் சமையலறை உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் முதியோர் தேசிய செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டில் இவை கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டன. (ச-25, 9)

# விஞ்ஞானமாணிப் பட்டம் விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானமாணி சாதாரண அல்லது சிறப்புப் பட்டம் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி கல்விப் பொதுத்தராதர உயர்தர விஞ்ஞானப் பிரிவுப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருக்கவேண்டும். விண்ணப்பப்படிவங்களை எனும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்களுக்கு மற்றும் விண்ணப்பிப்பதற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம், பிறவுன் வீதி எனும் முகவரியூடாகவோ 0212223374 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ தொடர்புகொள்ளலாம். (ச-25)



# கதிர்காம பாதயாத்திரைக் குழுவினருக்கு மருத்துகள், பழ வகைகள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், மே 10

கதிர்காமக்கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழாவை முன்னிட்டு நீண்டதூரப் பாதயாத்திரையான வரலாற்றுப் புகழ்மிக்க கதிர்காமக்கந்தன் ஆலயம் நோக்கிய பாதயாத்திரை வடமராட்சி தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கடந்த வியாழக்கிழமை காலை ஆரம்பமாகித் தொடர்ச்சியாக இடம் பெற்றுவருகிறது.

யாத்திரைக் குழுவினருக்கு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் புதுக்குடியிருப்பு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் வைத்து கடந்த புதன்கிழமை இரவு ஒருதொகை மருத்துவப் பொருள்கள் மற்றும் பழ வகைகள் என்பன இரண்டாம் கட்டமாகச் வழங்கப்பட்டன. (ச-25,66)

# மாட்டைத் திருடிய சந்தேகநபருக்கு விளக்கமறியல்!

அராலிப் பகுதியில் மாடு திருடிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மாடு திருடப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் உரிமையாளரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்திய போது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர் . (ச-22,125)

# கருத்துரையும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் போயாதினக் கருத்துரையும் கலந்துரையாடலும் நாளைமறுதினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு தேசியக் கலை இலக்கியப் பேரவையின் தலைமைப் பணிமனையின் 1134 (62), கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி கொக்குவிலில் அமைந்துள்ள கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தி வங்கி ஆய்வு அலுவலர் வசந்தராஜ் "மக்களின் ஐக்கியமும் விழிப்புணர்வும் இன்றி பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு சாத்தியமா? "எனும் தொனிப்பொருளில் ஆய்வுக் கருத்துரையையும், தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் க.தணிகாசலம் நிகழ்வின் தொடக்க உரையினையும் வழங்குவார்கள். கருத்துரை முடிவில் சபையோர் கலந்துரையாடல் இடம்பெறும். சமூக விஞ்ஞான அரசியற் கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)



யாழ். வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் திருமஞ்சத் திருவிழா கடந்த புதன்கிழமை இரவு மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-25,66)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

ஓர் ஏழையின் செல்வம் அவனது திறமைதான்.

– கன்பூசியஸ்–

# பேரழிவின் இரைச்சல்!

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் உச்சகட்ட மோதல்கள் வெடித்துள்ளன. 1971ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஏற்பட்ட பெரும் மோதலுக்குப் பின்னர் (பங்களாதேஷின் சுதந்திரத்துக்கான மோதல்) தற்போதைய மோதலே மிகத் தீவிரமாக மாறக்கூடிய சாத்தியங்கள் உள்ளன என்றும், ஒட்டு மொத்த காஷ்மீரையும் கைப்பற்றும் முனைப்பில் இந்தியா தீர்க்கமாக இருப்பதால், உயிரிழப்புகள் ஆயிரங்களில் அதிகரிக்கும் என்றும் வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

இந்தக் கருத்துகளையெல்லாம் மெய்ப்பிக்கும் வகையில்தான், இந்தியாவும் பாகிஸ்தானும் நேற்று முன்தினம் அதிகாலைமுதல் மோதிவருகின்றன. இரண்டு நாடுகளின் கேந்திர முக்கியத்துவம்மிக்க இடங்கள், வர்த்தகத் தலங்கள், துறைமுகங்கள் என்பன இலக்காக்கப்பட்டிருக்கின்றன. ஒரு முழுமையான போர் பிராந்தியத்தில் சூழ்ந்துள்ளது என்பதை எந்த ஐயப்பாடும் இல்லாமல் கூறிக் கொள்ளமுடியும். ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா உள்ளிட்ட பலதரப்பினரின் சமரச முயற்சிகள் அனைத்தும் தோற்றுப்போயிருக்கின்றன. ட்ரோன்கள், ஏவுகணைகள், தாக்குதல்கள், குண்டு வெடிப்புகள் இவைதான் இப்போது புரியும்படியான பாஷையாக மாறியிருக்கின்றன.

பொருளாதாரத்தில் இந்தியாவையும், சீனாவையும், சர்வதேசத்தையும் கொழுகொம்பாகப் பிடித்து, மெல்லமெல்ல எழுந்திருக்க எத்தனிக்கும் ஒருநாடுதான் இலங்கை. எனவே, இந்தப் போர் இந்தியாவையும், பாகிஸ்தானையும் 'பொருளாதார ரீதியில்' எவ்வளவுக்கெவ்வளவு தாக்குமோ, அவ்வளவுக்கவ்வளவு இலங்கையையும் தாக்கும். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமேயில்லை. பாகிஸ்தானின் கராச்சித் துறைமுகம் தாக்கப்பட்டுள்ளதால், அந்த நாட்டுடனான கடல்சார் தொடர்புகள் தற்போது உலக அரங்குக்குத் துண்டிக்கப்பட்டுள்ளது. வான் பரப்புகள் மூடப்பட்டுள்ளதால், தெற்காசியாவின் விமானப்பாதைகள் மிகவும் சிக்கலுக்கும், நெரிசலுக்கும் உள்ளாகியிருக்கின்றது. இதன் பாதிப்புகளை வெறும் மூன்றே நாள்களில் உணரத் தலைப்பட்டிருக்கின்றது இலங்கை.

அணிசேர்வதில்லை என்பது இலங்கையின் வெளிவிவகாரக்கொள்கையாக இருக்கலாம். ஆனால், இலங்கையின் பொருளாதாரப் பாதிப்புகளுக்கும் வெளிவிவகாரக் கொள்கைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. கணிசமான பாதிப்பை இந்தத் தீவு எதிர்கொள்ளத்தான் போகின்றது. விரைவில் இந்தப் போர் முடிவுக்கு வரும் பட்சத்தில் இலங்கை தப்பித்துக்கொள்ளும். ஆனால், அதற்கான எந்த சாத்தியங்களும் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை.

அத்துடன், இந்த விடயத்தில் ஒவ்வொரு நகர்வையும் இலங்கை மிகத்துல்லியமாக வெளிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு கருத்துகளுக்கும், ஒவ்வொரு முக்காற்புள்ளிகளுக்கும் பெறுமதியுண்டு. வழக்கம்போல், வார்த்தைகளால் ஜாலம் செய்யும் சித்து விளையாட்டுகளைக் காட்டுவதற்கு இதுவொன்றும் துறைமுகங்களில் ஆய்வுக் கப்பல்களை அனுமதிக்கும் விடயமல்ல. இது பிராந்தியத்தின் போர்ப்பதற்றம். இலங்கை இதற்குள் அகப்பட்டு அமிழ்ந்துபோகாமல் இருப்பதற்கு உச்சபட்ச எச்சரிக்கை அவசியம்.




## இந்தியாவுடனான ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தக்கூடாது

### சிங்கள அமைப்புகள் மனுத்தாக்கல்

**கொழும்பு, மே 10**

**இந்தியாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தக்கூடாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமும் வேறு சில சிங்கள அமைப்புகளும் இணைந்து உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல்செய்துள்ளன.**

இந்தியாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் இலங்கையின் பாதுகாப்புக்கும் இறையாண்மைக்கும் அச்சுறுத்தல் எனவும், இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டால் சீனக் கப்பல்கள் இலங்கைக்கு வர முடியாது எனவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுவின் பிரதியைப் பிரதமர் மோடிக்கு அனுப்புமாறு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் கையளிக்கப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை அமைச்சர்கள், பிரதமரின் செயலாளர் சட்டமா அதிபர் உட்பட 29 பேருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ச-25)



## மதுபானசாலைகள் 3 நாள்கள் பூட்டு

கொழும்பு, மே 10

உரிமம் பெற்ற அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மே மாதம் 12 ஆம் திகதி முதல் மே மாதம் 14 ஆம் திகதி வரை 3 நாள்கள் மூடப்படவேண்டும் என மதுவரித் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அமைச்சரவையின் தீர்மானத்துக்கு இணங்க, மே மாதம் 12 ஆம் திகதி வரும் வெசாக் பௌர்ணமி போயா தினத்துடன் இணைந்து ஏற்பாடுசெய்யப்படும் தேசிய வெசாக் விழாவை முன்னிட்டு, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சுயாதீன சட்டத்தரணிகள் அலுவலகம் ஸ்தாபித்தல்

### அமைச்சரவை ஒப்புதல்

கொழும்பு, மே 10

குற்றவியல் நீதித்துறையை செயற்திறன் மிக்கதாகவும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகவும் கொண்ட, ஒரு சுயாதீன அரச சட்டத்தரணி அலுவலகத்தை உருவாக்குவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

சட்டமா அதிபர் அலுவலகத்துக்கும் இந்த அலுவலகத்துக்கும் தொடர்பு இருக்கமாட்டாது. இந்த அலுவலகம் மாகாண மட்டத்தில் உப அலுவலகங்களைக் கொண்டிருக்கும்.

அதேவேளை நீதித்துறைத் தாமதங்களைக் குறைப்பதற்கு உதவுவதுடன் அரசாங்க வழக்குகளையும் கையாளும். அத்துடன் புதிய சட்டத்தை வரைவதற்கும் தேவையான சட்டத்திருத்தங்களை பரிந்துரைப்பதற்கும் உயர்நீதிமன்ற நீதிபதி யசந்த கோட்டகொட தலைமையிலான தொழில்நுட்ப நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (ச-25, 6)

## கொட்டாவவில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி

கொட்டாவையில் மலபல்லாப் பகுதியிலுள்ள ஒரு கோவிலுக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் மிரிஸ்ஸாயப் பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை, பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ச-28)



## தனியார்துறை சம்பள உயர்வு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே 10

தனியார் துறை ஊழியர்களின் சம்பள அதிகரிப்புத்தொடர்பான திருத்தங்களுக்கு அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது. இந்தச் சம்பள அதிகரிப்புத் தொடர்பான திருத்தங்களுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி ஏற்கனவே பெறப்பட்டது. தொழிலமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட வரைபுக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைத்துள்ள நிலையில் வர்த்தமானியிலும் வெளியிடப்படவுள்ளது. (ச-25, 6)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
ஞாயிற்றுக்கிழமை- சித்திரை 28
11.05.2025
சுபநேரம் : 08.54- 10.24
ராகுகாலம் : 04.24 - 05.54

## புதிய பாப்பரசர் தெரிவுக்கு ஆலய மணிகள் ஒலிப்பு

மன்னார், மே 10

கத்தோலிக்க திருச்சபையின் 267 ஆவது புதிய திருத்தந்தை தெரிவுசெய்யப்பட்டதை முன்னிட்டு, மன்னார் மறைமாவட்டத்திலுள்ள தேவாலயங்களில் நேற்று வெள்ளிக்கிழமை காலை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின் ஆலய மணிகள் ஒலிக்கப்பட்டன.

திருத்தந்தைக்கான ஆசீர்வேண்டி ஆலயத்துக்குள் மக்கள் பயபக்தியுடன் பாடல்களையும் இசைத்தனர். கத்தோலிக்க திரு அவையின் 267 ஆவது திருத்தந்தையாக கருதினால் றொபேட் பிரான்சிஸ் பிரீவோஸ்டைட் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் 14 ஆவது சிங்கராயர் பாப்பரசர் என தனக்கு பெயரைச்சூட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25,60)

### திருகோணமலை மாவட்டத்தில்

# வெருகல் தவிர்ந்த ஏனைய சபைகளில் ஆட்சியமைப்பதில் இழுபறி நிலைமை

கொழும்பு, மே 10

**நடந்துமுடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கக்கூடிய பெரும்பான்மையுடன் வெருகல் பிரதேச சபையில் வெற்றிபெற்றுள்ளது. ஏனைய 12 சபைகளிலும் எந்தவொரு கட்சியும் தனித்து ஆட்சியமைக்கக்கூடிய பெரும்பான்மை ஆசனங்களைப் பெறவில்லை.**

தேசிய மக்கள் சக்தி கந்தளாய், சேருவில, பதவிஸ்ரீபுர, கோமஹங்கடவெல, மொறவெவ ஆகிய பிரதேச சபைகளில் ஏனைய கட்சிகளை விடவும் அதிக ஆசனங்களைக் கொண்டுள்ளபோதும், தனித்து ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மையைக் கொண்டிருக்கவில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சி திருகோணமலை மாநகரசபை, பட்டினமும் சூழலும் பிரதேசசபை, மூதூர்© பிரதேசசபைகளில் அதிக ஆசனங்களைப் பெற்றிருந்தாலும், அந்தக் கட்சியும் தனித்துஆட்சியமைக்கக்கூடிய பெரும்பான்மையைப் பெறவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குற்றவெளி பிரதேசசபையிலும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கிண்ணியா பிரதேசசபையிலும் அதிக ஆசனங்களைப் பெற்றிருந்தபோதும், அவையும் தனித்து ஆட்சியமைக்கக்கூடிய பெரும்பான்மையைப் பெறவில்லை. திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேசசபையைத் தவிர ஏனைய அனைத்து உள்ளூராட்சிசபைகளிலும் எந்தக் கட்சியும் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலைமையே உள்ளது. கூட்டணி அமைத்தே ஆட்சியமைக்கவேண்டியநிலைமை இருப்பதால், கட்சிகளிடையே இழுபறி நிலைமை காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



## சிறார்களின் சந்தை

மன்னார் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய பங்கிற்குகீழ் இயங்கும் மூன்று முன்பள்ளிகளான சென்.மோரீஸ், அமலதாசன் மற்றும் விக்றறீஸ் ஆகிய முன்பள்ளிகளில் சிறுவர் சந்தை நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. பங்குத்தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ச-41-60)

# AIA உயர்கல்வி புலமைப்பரிசில் விருதுகளின் 30ஆவது ஆண்டு விழா பிரமாண்டமாக நடைபெற்றது

AIA இன்சூரன்ஸ் சமீபத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியது, அதன் உயர்கல்வி புலமைப்பரிசில் விருதுகளின் 30 ஆண்டுகளைக் கொண்டாடும் வகையில், கொழும்பில் உள்ள சினமன் லேக்சைடில் நிகழ்வு விமர்சையான இடம்பெற்றது. AIA உயர்கல்வி புலமைப்பரிசில், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தரம் 05 புலமைப்பரிசில் தேர்வில் சிறந்து விளங்குபவர்களுக்கு, அவர்களின் உயர்தரப் படிப்பு தொடங்கியதிலிருந்து பல்கலைக்கழகப் பட்டப் படிப்பை முடிக்கும் வரை, மாதாந்த உதவித் தொகையை வழங்குகிறது. இந்த திறமையான மாணவர்கள் நிதிச் சுமையின்றி தங்கள் கல்வி அபிலாஷைகளைத் தொடர உதவுவதே இந்த முயற்சியின் நோக்கமாகும். இந்த ஆண்டு நிகழ்வில், தரம் 5 புலமைப்பரிசில் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் சிறந்து விளங்கும் 24வது தொகுதி மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர், அவர்கள் தற்போது தங்கள் க.பொ.த உயர்தரப் படிப்பைத் தொடங்கியுள்ளனர். குறிப்பிடத் தக்க வகையில், இந்த புலமைப்பரிசில்கள் AIA வாடிக்கையாளர்களுடனான எந்தவொரு தொடர்பையும் பொருட்படுத்தாமல், முற்றிலும் தகுதியின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

இந்த இளம் அறிஞர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளை இந்த விழா கொண்டாடியது. மேலும் கல்வியில் சிறந்து விளங்குவதற்கும் நாளைய தலைவர்களை வளர்ப்பதற்கும் யுஐயு இன் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. பிரதம அதிதியாக கலந்து கொண்ட தொல்பொருள் முதுகலை நிறுவனத்தின் மூத்த பேராசிரியர் ராஜ் குமார் சோமதேவா, கல்வியின் முக்கியத்துவத்தையும், எதிர்கால சந்ததியினரை மேம்படுத்துவதில் பெருநிறுவனப் பொறுப்பின் பங்கையும் எடுத்துரைத்து, ஒரு ஊக்கமளிக்கும் உரையை நிகழ்த்தினார்.

1994 ஆம் ஆண்டு முதல், இந்த நீண்டகால பெருநிறுவன சமூகப் பொறுப்பு முயற்சியின் மூலம் உள்ளங்களை ஊக்குவிக்க AIA இன்சூரன்ஸ் உறுதிபூண்டுள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களாக, இந்தத் திட்டம் 750 க்கும் மேற்பட்ட மாணவர்களின் வாழ்க்கையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, அவர்களில் பலர் மருத்துவம், சட்டம், பொறியியல், கல்வித்துறை மற்றும் பொது சேவை போன்ற பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கி, நாட்டின் முன்னேற்றத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

AIA ஸ்ரீலங்காவின் இயக்குநர்தலைமை நிர்வாக அதிகாரி சதுரி முனவீர இந்த முயற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, "இந்தத் திட்டம் எனக்கு ஒரு சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் நான் இலங்கை கல்வி முறையிலிருந்து பயனடைந்துள்ளேன், தரம் 5 உதவித் தொகை எனது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாகும். எனவே, நாட்டின் அடுத்த தலைமுறையை மேம்படுத்துவதற்கு உறுதிபூண்டுள்ள ஒரு நிறுவனத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். AIA உயர் கல்வி உதவித்தொகைத் திட்டம் பல வழிகளில் தனித்துவமானது. முதலாவதாக, உயர்கல்வியை ஆதரிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட நாட்டின் நீண்டகால சமூகப் பொறுப்பு முயற்சிகளில் ஒன்றாக இது திகழ்கிறது. இரண்டாவதாக, உதவித்தொகை பெறுபவர்களைத் தேர்ந்தெடுப்பது முற்றிலும் தகுதியை அடிப்படையாகக் கொண்டது. மிக முக்கியமாக, தகுதி என்பது யுஐயு வாடிக்கையாளரின் குழந்தையாக இருப்பதைப் பொறுத்தது அல்ல. இது நாங்கள் தொடர்ந்து நிலைநிறுத்தும் ஒரு தனித்துவமான தரத்தை அமைக்கிறது." என குறிப்பிட்டார். "30 ஆண்டுகளாக, AIA இன்சூரன்ஸ் நிறுவனம், AIA உயர்கல்வி உதவித் தொகைகள் மூலம் இலங்கையின் மிகவும் நம்பிக்கைக்குரிய மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் பாக்கியத்தைப் பெற்றுள்ளது. இந்தத் திட்டம், மக்கள் தங்கள் வாழ்க்கையில் தங்கள் முழு திறனையும் அடைய உதவுவதை எங்கள் முக்கிய நோக்கமாக பிரதிபலிக்கிறது, மேலும் இந்த இளம் அறிஞர்களின் வாழ்க்கையிலும், ஒட்டுமொத்த தேசத்திலும் இது ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றி நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். இந்தத் பிரகாசமான மனங்களுக்கு எதிர்காலத்தில் என்ன காத்திருக்கிறது என்பதைக் காண நாங்கள் ஆவலாக உள்ளோம், மேலும் அவர்களின் கல்விச் சிறப்பை நோக்கிய பயணத்தில் ஒரு பகுதியாக இருப்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்," என்று யுஐயு இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி சசித் பம்பரதேனியா விரிவாகக் கூறினார்.

நீண்டகால பங்குதாரர் மதிப்பு உருவாக்கம் மற்றும் இலங்கையின் அடுத்த தலைமுறை தலைவர்களை மேம்படுத்துவதன் மூலம் சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான AIA இன் உறுதிப்பாட்டின் சக்தி வாய்ந்த நினைவூட்டலாக இந்த நிகழ்வு செயற்பட்டது. புதிய தொகுதி புலமைப்பரிசில் பெறுநர்கள் தங்கள் கல்விப் பயணத்தைத் தொடங்கும் போது, AIA இன்சூரன்ஸ் அவர்களின் அபிலாஷைகளைத் தொடர்ந்து ஆதரிப்பதற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பதற்கும் அதன் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.



# ஐரோப்பாவில் மருத்துவ பட்டப்படிப்பு

உங்கள் பிள்ளைகளை மருத்துவர் , பல் மருத்துவர் அல்லது விமானி ஆக்கி பார்ப்பது உங்கள் ஆசையா ?
உங்கள் பிள்ளைகளும் அதற்கு விருப்பப்படுகிறார்களா ?
நீங்கள் வசிக்கும் நாடுகளில் அந்த வாய்ப்புகள் கிடைக்கவில்லையா ?
கவலையை விடுங்கள் அதற்கான வழிமுறைகளை நாம் ஐரோப்பிய மற்றும் அதனை அண்மித்த நாடுகளான

Bosnia ( $ 4.000/year ),
Serbia ( $ 7,000 / year ),
Bulgaria ( $ 9,000 / year )

ஆகிய நாடுகளில் நாம் அதை ஏற்படுத்தி தருகிறோம்



**Medical studies - 6 years program**
**Minimum qualification:**
AL - Minimum 3s in science subjects ( Biology , Chemistry and Physics or maths) Minimum -English S in OL

**இன்றே தொடர்பு கொள்ளுங்கள்**
**Harmonica NIs Doo**
**Global Medical Studies ( GMS )**
**Serbia RS**
**Representatives of GMS**

MR. MAYOORAN - (SRILANKA) - 0094 771343832
DR. LINGAM ( SRILANKA ) - 0094 77 004 8799
MR. PARANI - 0094 76 700 5929
DR. MATHI ( UK ) - 0044 7543620416


பாகிஸ்தானின்

# 300 ட்ரோன்களை வீழ்த்தியது இந்தியா!

இந்தியாவுக்குள் 36 இடங்களை இலக்குவைத்து முன்னூறுக்கும் மேற்பட்ட ட்ரோன்களால் தாக்குதல் நடத்த பாகிஸ்தான் முயன்றது என்றும், அனைத்துத் தாக்குதல் முயற்சிகளும் முறியடிக்கப்பட்டுள்ளன என்றும் இந்திய இராணுவத்தின் உயரதிகாரியான கேர்ணல் சோபியா குரேஷி தெரிவித்துள்ளார்.

'ஒப்பிரேஷன் சிந்தூர்' நடவடிக்கைக்குப் பிந்தைய பாகிஸ்தான் இராணுவத்தின் வான்வழித் தாக்குதல் தொடர்பான செய்தியாளர் சந்திப்பு புதுடெல்லியில் நேற்று மாலை நடைபெற்றது. 48 மணிநேரப் போரின் பின்னர்? இந்திய இராணுவத்தால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பு என்பதால், அதில் கூறப்படவுள்ள விடயங்கள் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது.

இதன்போதே, இந்தியாவில் பொதுமக்கள் அதிகளவில் வசிக்கும் பகுதிகள் உட்பட 36 இடங்களை பாகிஸ்தான் இலக்குவைத்தது என்று கேர்ணல் சோபியா குரேஷி குறிப்பிட்டுள்ளார். இந்திய ஆயுதப் படைகள் இயக்கவியல் மற்றும் இயக்கவியல் அல்லாத வழிமுறைகளைப் பயன்படுத்தி இந்த ட்ரோன்களில் பலவற்றை வீழ்த்தின என்றும் கேர்ணல் சோபியா குரேஷி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் வான் பாதுகாப்பு அமைப்புகளைச் சோதிக்கும் நோக்கிலும், உளவுத் தகவல்களை சேகரிக்கும் நோக்கிலும் பாகிஸ்தான் இத்தகைய பெரிய அளவிலான வான்வழி ஊடுருவல் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. பாகிஸ்தான் பயன்படுத்திய ட்ரோன்களின் உடைந்த பாகங்கள் குறித்து தடயவியல் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. ஆரம்ப அறிக்கைகளின்படி, அவை துருக்கியைச் சேர்ந்தவை என்பது தெரிய வந்துள்ளது என்று கேர்ணல் சோபியா குரேஷி மேலும் கூறியுள்ளார். (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 04 . 1948



மறைவு 07 . 05 . 2025

**திரு. வைத்திலிங்கம் சிவபாலன்**

திரு. வைத்திலிங்கம் சிவபாலன் அவர்கள் கடந்த (07.05.2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம்-தங்கமுத்து தம்பதியின் மூத்த மகனும், காலஞ்சென்ற மயில்வாகனம்-சாவித்திரி தம்பதியின் மருமகனும், ஞானேஸ்வரி அவர்களின் அன்பு கணவரும், செந்தில்வாசன், செந்தில்குமரன், செந்தில்ராஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். சுமங்கலா, கார்த்திகா ஆகியோரின் மாமனாரும், டிருஜன், ஜெனீசன், லினிஷா. பவிஷா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற தர்மபாலச்சந்திரன் (அன்னப்பிள்ளை). ஜெயபாலன், றஞ்சினி ஆகியோரின் சகோதரரும் விஜிதா. தபோஜன் ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (10.05.2025) சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி. மடத்தடியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு (11.05.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து கீரிமலை, இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பிரிவால் துயருறும் குடும்பத்தினர்**

**கொல்லங்கலட்டி,**
**மாவிட்டபுரம்.**

**மனைவி-071 904 8595**
**தபோ-077 841 0464**

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 05 . 1942



மறைவு 08 . 05 . 2025

**அமரர் சீனியர் கந்தசாமி**

ஊரெழு கிழக்கை பிறப்பிடமாகவும் செருக்கப்புலம் வீதி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் கந்தசாமி கடந்த (06.05.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியர் பொன்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவலை சின்னாச்சி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக்கணவரும் சசிகலா (இத்தாலி), சசிதரன் (கொழும்பு) காலஞ்சென்ற அகிலேஸ்வரன், சதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும். செல்லத்துரை, சிந்தாமணி, முருகேந்திரன், நவமலர், காலஞ்சென்ற ராணி, நேசன் ஆகியோரின் சகோதரரும், ராணி, மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், குகதாசன் (இத்தாலி), யோகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் பிரிவிந்திரன், கிருத்திகா, தர்சன், கவிகரன் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 10.00 மணியளவில் கட்டைக்காடு கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**076 815 4049**

(CS 3137) V-1

## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய உற்சவ கால
## (2025.06.09 -2025.06.10)
## வாகனத்தரிப்பிடங்களை குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏல அறிவித்தல் -2025

ஏலம் கூறப்படும் இடம் :- முள்ளியவளை உப அலுவலகம். கரைதுறைப்பற்று பிரதேசசபை
ஏலம் கூறப்படும் நாள் :- 22.05.2025 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி

**வாகனத்தரிப்பிட ஏல விபரம்**

| தொ .இல | வாகன வகை | நாளொன்றுக்கு அறவிடவேண்டிய தொகை | ஆகக் குறைந்த ஏலம் கூறும் தொகை | செலுத்த வேண்டிய பிணைப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | துவிச்சக்கர வண்டி<br>மோட்டார் சைக்கிள் | 50.00<br>100.00 | 465,500.00 | 45000.00 |
| 02 | முச்சக்கர வண்டி | 150.00 | | |
| 03 | கார் | 200.00 | | |
| 04. | ஏனைய மோட்டார் வண்டி<br>பஸ்,பார ஊர்தி | 300.00 | | |

**ஏலத்தில் பங்குபற்றுவதற்கான நிபந்தனைகள்**

01. ஏலத்தில் பங்குபற்றுவோர் மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 2000.00 இனை செலுத்திப பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.(குறித்த தினத்தில் , குறித்த இடத்தில் மு.ப 8.30 தொடக்கம் 10.30 மணி வரை பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளலாம்).
02. 2025/06/09.10 ஆம் திகதிகளில் மட்டுமே ஆலய சுற்றாடலில் சபையால் இனங்காட்டப்படும் இடங்களில் வாகனத்தரிப்பிடங்கள் அமைத்து முடிக்கப்படல் வேண்டும்.
03. சபையில் தவறுனர் பட்டியலில் உள்ளவர்கள் ஏலத்தில் பங்குபற்ற தகுதியற்றவராவார்.
04. வாகனத்தரிப்பிடத்திலிருந்து வாகனங்கள் ஏதேனும் தொலைந்தால் ஏலத்தில் எடுப்பவரே அதற்கு பொறுப்பாளியாவார்.
05. ஏலத்தில் தெரிவுசெய்யப்படுவோராலேயே வாகனத்தரிப்பிடத்திற்கான வெளிச்சமூட்டல். பாதுகாப்புவேலி மற்றும் காணித்துப்பரவு என்பன மேற்கொள்ளப்படல் வேண்டும்.
06. ஏலத்தில் தெரிவுசெய்யப்படுவோராலேயே வாகனத்தரிப்பிடத்திற்கான தரிப்பிட கட்டணங்களுக்கான பற்றுச் சீட்டுக்களை தமது செலவிலேயே அச்சிடல் வேண்டும் என்பதுடன் பற்றுச்சீட்டுக்களின் அடிக்கட்டையினை சபையிடம் ஒப்படைத்தல் வேண்டும்.
07. ஏலத்தில் தெரிவுசெய்யப்படுவோர் ஏலத்தொகையினை குறித்த இடத்திலேயே செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்று பிற்பகல் 3.30.00 மணிக்கு முன்பாக ரூபா 25.00 முத்திரையுடன் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளித்து உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும்.
08. ஏலத்தில் பங்குபற்றுவோர் கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பதென்பதை உறுதிப் படுத்துவதற்கு, கிராமசேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதியையும் வதிவிடச்சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை.முல்லைத்தீவு.** (CR 44968) J-1 09.05.2025

## குருதிக்கொடை இன்று

யாழ்ப்பாணம், மே 10

சுழிபுரம் மேற்கு பாரதி கலைமன்றத்தின் 43 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட இரத்ததான முகாம் கலைமன்றத்தினரால் ஏற்பாடுசெய்யபட்டுள்ளது.

இதன்படி இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் கலை மன்றத்தில் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ள குருதிக் கொடையாளர்கள் 076 674 5679எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)

## தேசிய வெசாக் வாரம் இன்று ஆரம்பம்

'நல்ல குணங்களைக் கொண்ட உன்னத மக்களுடன் பழகுவோம்' எனும் தொனிப்பொருளில் இந்த ஆண்டு தேசிய வெசாக் பண்டிகை கொண்டாடப்படுகின்றது. இன்று முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை ஒருவாரகால வெசாக் வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நுவரெலியா பௌத்த நிலைய விகாரையில் நடைபெறவுள்ளது. நுவரெலியாவில் நடைபெறும் தேசிய வெசாக் பண்டிகை மற்றும் அனுராதபுரத்திற்கு செல்லும் பக்தர்களுக்காக விசேட ரயில் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. எதிர்வரும் 13ஆம் திகதி வரை இந்த விசேட ரயில் சேவை இடம் பெறும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

**வாகனம் விற்பனைக்குண்டு**
அந்தியகால சேவை வாகனம் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு: 077 226 9823

**தேவை**
யாழ் நகரத்திற்குள் வீடு அல்லது அறை வாடகைக்குத் தேவை
077 844 9707
(CS/58201) J-1

# மரண அறிவித்தல்



## பரிமளம் விநாசித்தம்பி

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 67 வெங்கடேஸ்வரர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட பரிமளம் விநாசித்தம்பி அவர்கள் 07.05.2025 புதன்கிழமை அன்று காலமானார்.

காலஞ்சென்ற விநாசித்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் வள்ளியம்மை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா இராமசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்றவர்களான பாலவகம் நல்லம்மா, மங்கையற்கரசி, நாகேஸ் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், நல்லதம்பி, மயில்வாகனன், நாகரத்தினம், கதிரவேலு ஆகியோரின் மைத்துனியும், அமிர்தம், சரசமலர், திருமேனி, குணலட்சுமி, ஆகியோரின் சகலியும், ஏரம்பமூர்த்தி, உலகநாதன், பத்மாவதி, திலகவதி, தர்மராஜா, இரத்தினேஸ்வரி, அமலேஸ்வரி, இராயேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகேஸ்வரி, குணபூசனம், நாகராசா, குணரத்தினம்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| தாயின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 1931.01.08 | 07.05.2025 |

தகவல்:
குடும்பத்தினர்
075 208 7350

(CS/2785) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 03 . 1958



மறைவு
07 . 05 . 2025

## இராசேந்திரம் குசலகுமாரி

அளவெட்டி அலுக்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் குசலகுமாரி அவர்கள் கடந்த (07.05.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், இராசேந்திரம் அவர்களின் பாசமிகு மனைவியும், அனுசியா (ஆசிரியை - வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம்), Dr.அஜந்தன் (சுதேச மருத்துவ திணைக்களம் வடமாகாணம், ஸ்ரீவர்மா மருத்துவ நிலையம் - மருதனார்மடம்), அகல்யா (கனடா), அனந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குகதாசன் (கனடா), வேணுசுதா (கனடா), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுதாகரன் (விபுலானந்தக் கல்லூரி, வவுனியா), யமுனா (காணி ஆணையாளர் திணைக்களம், வடமாகாணம்), அகிலன் (கனடா), கவிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபிஸ்கா, அக்ஷா, ஆதீஸ், ஆரன், அமிஷா, அனிஸ்கா, அபிரன், அக்ஷவி, சாக்ஷவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 224 6887, 077 159 7596

அளவெட்டி கிழக்கு,
அலுக்கை, அளவெட்டி.

(CS/44954) J-1

# மரண அறிவித்தல்

மலர்வு
16 . 06 . 1983



உதிர்வு
05 . 05 . 2025

## பாலசுப்பிரமணியம் கிரிதாஸ் (கிரி)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும், தற்போது நீர்வேலியில் வசித்தவருமாகிய பாலசுப்பிரமணியம் கிரிதாஸ் அவர்கள் (05.05.2025) திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - நித்தியகலா தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கம்மா மற்றும் முத்தையா - அம்மாப்பிள்ளை தம்பதியரின் பேரனும், சங்கரி, தனுஜா ஆகியோரின் ஆசைக் கணவரும், அலிஷா, நித்தியா, அஜெய், அகிஷா, அயிஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஜிதா, காலஞ்சென்ற ஜீர்த்தா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேஷ்கண்ணா அவர்களின் மைத்துனரும், ரோஹித், ஹனித்தா, மேகா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 1.00 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
076 839 6935

நித்திலைட்ஸ்
குறுக்குறோட், நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(CS/58185) J-1

# வாழைக்குலை விலை வீழ்ச்சி செய்கையாளர்கள் பாதிப்பு

கிளிநொச்சி, மே 10

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழைக்குலையின் விலை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் பெரும் நட்டத்தை எதிர்நோக்குவதாக செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். ஒரு கிலோ கதலி வாழைக்காய் 15ரூபா தொடக்கம் 20ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுகின்றது. இதனால் உற்பத்திச் செலவுக்கேற்ப விற்பனை செய்யமுடியாத நிலை காணப்படுகிறது என்றும் செய்கையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-41-113)

# ரூபாவின் பெறுமதி உயர்வு

கொழும்பு, மே 10

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று வீத அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 294 ரூபா 88 சதமாக பதிவாகியுள்ளது.

அத்துடன் விற்பனை விலை 303 ரூபா 24 சதமாக பதிவாகியுள்ளது. (ச-இ)

# வட இலங்கைச் சங்கீத சபையின் கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
10.05.1941

விண்ணில்
30.04.2025

வட இலங்கைச் சங்கீத சபையின்
நிர்வாக சபை உறுப்பினர்
செல்வி பத்மஸ்ரீ அவர்களின்
தந்தையார்

**அமரர் சிவஸ்ரீ. சிவகுரு கதிரவேலு குருக்கள்**

30.04.2025 ஆம் திகதி
அமரத்துவம் அடைந்த செய்தி
அறிந்து எமது ஆழ்ந்த துயரத்தை
தெரிவிப்பதுடன் அன்னாருடைய
ஆன்மா மோட்ஷதீபமடைய
எல்லாம் வல்ல தில்லைக் கூத்தன்
பாதம் பணிகின்றோம்.

தலைவர் நிர்வாக சபை உறுப்பினர்கள்
வட இலங்கைச் சங்கீதசபை

# மரண அறிவித்தல்

பிறப்பு
20 . 09 . 1962



இறப்பு
22 . 04 . 2025

## குணரத்தினம் வேணுகோபால்

(சந்திரன், அருமை)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட குணரத்தினம் வேணுகோபால் கடந்த (22.04.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரத்தினம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம் - கமலாதேவி தம்பதியரின் பாசமிகு மருமகனும், தயாளினியின் பாசமிகு கணவரும், கேசிகாவின் அன்புத் தந்தையும், பிரநீதனின் பாசமிகு மாமனாரும், புஸ்பராணி, காலஞ்சென்ற கமலலோஜினி மற்றும் கமலயோகேஸ்வரன், விட்ணுமூர்த்தி, ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை 22nd scout hall, Arthur Road, motspur park KT3 6LX (7.30AM - 10.00AM London time) எனும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக லண்டனில் அமைந்துள்ள Putney vale creamatorium Stag lane, London SW 15 3DZ எனும் இடத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதரன்
கமலயோகேஸ்வரன்
077 6282614

(CS/58141) E-1



## மின்னல் தாக்கத்தால் தென்னை தீப்பற்றல்

யாழ்ப்பாணம், மே 10
யாழ்.நகரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நண்பகல் வேளை இடி, மின்னல் தாக்கத்துடனான மழையின்போது தென்னைமரமொன்றில் மின்னல் தாக்கியதில் தென்னை தீப்பற்றி எரிந்துள்ளது. இந்தச் சம்பவம் கோப்பாய்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. (41-17)

## காணி சுவீகரிப்பு வர்த்தமானி மீளப்பெற மே 28 காலக்கெடு

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

அரசு சுவீகரிக்க முயன்ற வடக்கின் நிலப்பரப்புத் தொடர்பான வர்த்தமானியை அரசு மீளப் பெறுவது தொடர்பில் மே 28 வரை காலக்கெடுவை வழங்கியுள்ளோம். குறித்த காலப்பகுதியில் வர்த்தமானி மீளப் பெறாவிடில் அனைத்துத் தமிழ்க்கட்சிகளையும் இணைத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.
யாழ். ஊடக அமையத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எமது காணிகள் எம்மை விட்டுப் பறிபோகின்ற சூழல் உருவாகியுள்ளது. ஜனாதிபதிக்கும் இந்த அரசாங்கத்துக்கும் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானி பிரசுரத்தை உடனடியாக மீளப்பெறுமாறு மக்கள் ஆணையுடன் கோருகின்றோம். மே 28 ஆம் திகதி வரை நாம் அரசாங்கத்துக்கு கால அவகாசம் கொடுத்துள்ளோம். அரசாங்கம் வர்த்தமானியை மீளப்பெறாத பட்சத்தில் மக்கள் போராட்டம் ஒன்றினை நடத்த நாம் தீர்மானித்துள்ள தால் ஏனைய கட்சிகள் எமக்கு ஒத்துழைப்பினை நல்கவேண்டும்.
அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் இணைந்து வருமாறு கேட்டுக்கொள்கிறேன். இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளராக நான் விடுகின்ற அழைப்பாக அல்லாது இனத்துக்கான அழைப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள். நிலம் அழிந்தால் இருப்பு அழிந்துபோய்விடும். ஆகவே இந்த அடிப்படை விடயத்திலே ஒன்றாக இணையுமாறு வேண்டுகோள் விடுகின்றேன் -என்றார். (ச-33-125)

# வடக்கின் சுற்றுலாத்துறையை வினைத்திறனாக்க வேண்டும்

### ரவிகரன் எம்.பி வலியுறுத்து.



**யாழ்ப்பாணம், மே 10**
**வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை வினைத்திறனாக இயங்கச்செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
தற்போது சுற்றுலாத்துறை மூலம் கிடைக்கும் வருமானத்திலேயே இலங்கை முழுவதும் தங்கியுள்ளது.
அதிகளவான சுற்றுலாப்பயணிகள் எமது நாட்டுக்கு வருகைதருகின்றனர். குறிப்பாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்திற்கு அதிகளவான சுற்றுலாப்பயணிகள் பலாலி சர்வதேச விமான நிலையம் மற்றும், நாகப்பட்டினம் படகுச் சேவையினூடாக வருகைதருகின்றனர்.
சுற்றுலா சார்பான விடயங்கள் முனைப்புப் பெற்றிருக்கும் நிலையில் இவைசார்பாக அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் நிர்வாகரீதியாக மாவட்டச் செயலகங்களில் பிரத்தியேகமாக சுற்றுலா அலுவலகங்கள் இல்லை. மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் சுற்றுலா அபிவிருத்திக்கான உத்தியோகத்தர்கள் இல்லை.
சுற்றுலாசார் அபிவிருத்திச் செயற்பாடுகள், அலுவலகர்களால் மேலதிக நிர்வாகக் கடமையாகவே மேற்கொள்ளப்படுகின்றன. இதே நிலைமை மாகாணசபைகளில் குறிப்பாக உள்ளூராட்சிசபைகளிலும் காணப்படுகின்றன.
வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களும், மாவட்டங்களிலுள்ள ஒவ்வொரு பிரதேசசெயலகப் பகுதிகளும் தனித்துவமான இயற்கை மற்றும், கலாசார வளங்களைக் கொண்டுள்ளன. மேலும் மரபுரிமை மையங்கள், பாரம்பரிய உணவுகள், உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் போன்றவற்றை சந்தைப்படுத்துவதற்கு சுற்றுலாத் துறைக்கு பலமான நிர்வாக அலுவலகமும் ஆளணியும் தேவை. இதற்கென புதிய அலுவலர்கள் உள்வாங்கப்படவேண்டும். புதிய அலுவலர்களின் திறமைகளையும், ஆற்றல்களையும் பயன்படுத்தக்கூடிய வகையில் எமது மாகாணத்திலுள்ள மாவட்டச்செயலகங்களில் சுற்றுலா அலகுகளை உடனடியாக நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டும்- என்றார். (ச-இ)



நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் வருடாந்த திருவிழாவின் கைலாச வாகனத் திருவிழா கடந்த வியாழக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ச-41-17)

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
07 . 09 . 1935



மறைவு
10 . 05 . 2022

### அமரர் கணபதிப்பிள்ளை அமிர்தமணி

யாழ். மண்டைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கணபதிப்பிள்ளை அமிர்தமணி அவர்களின் 3ம் ஆண்டு நினைவஞ்சலி.

**ஆண்டுகள் மூன்று ஆன போதிலும்
நீங்களின்றிய
துயரங்கள் இன்னும் ஆறவில்லை அம்மா!!
எம்மை படைத்த எம் குலதெய்வமே
பணிகின்றோம் உங்கள் பாதம் தொட்டு அன்பு
பெருக அணைத்த கரங்களும் நாம் ஆழ்ந்து
உறங்கிய பாச மடியும் இன்பம் தரும் தங்கள்
இனிய சொற்களும் இன்றியே நாங்கள்
இயல்பிழந்தோம் அம்மா!!
உங்களின் மீதான எங்களின் தேடல்கள் எங்கள்
உயிர் மூச்சு உள்ளவரை ஓயாது!!!
என்றும் உங்கள் நினைவுகளுடன் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்....**

தகவல்:
குடும்பத்தினர்
க.கண்ணதாசன்
Swiss Burgdorf

# சிறுவர் பாதுகாப்புக் கொள்கை விழிப்புணர்வுச் செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 10
சிறுவர் பாதுகாப்புத் தேசிய கொள்கை தொடர்பாக அரச உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தலைமையில் யாழ்.மாவட்டப் பிராந்தியச் சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.
செயலமர்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்கள், மாவட்ட அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
இதன்போது சிறுவர் பாதுகாப்பும் சட்டங்களும், சிறுவர் பாதுகாப்புத் தேசிய கொள்கைகளைத் தெளிவுபடுத்தல் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கடமைகள், செயற்பாடுகள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்குத் தெளிவூட்டப்பட்டது. (ச-25,66)





# பிரான்ஸின் போர்க்கப்பல் இலங்கையில் நங்கூரம்!

பிரான்ஸ் கடற்படைக் கப்பலான 'பியூடெம்ப்ஸ் பியூப்ரே' உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு, கொழும்புத் துறைமுகத்தை நேற்று வந்தடைந்துள்ளது.
அந்தக் கப்பலை கடற்படையின் மரபுகளுக்க அமைவாக, இலங்கை கடற்படையினர் வரவேற்றனர். எதிர்வரும் 13ஆம் திகதிவரை இந்தக் கப்பல் இலங்கையில் நங்கூரமிட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## புலிகள்...

பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'நாஜிவாதம் மற்றும் பாசிசவாதம் என்பன தோற்கடிக்கப்பட்ட நாள் இன்றாகும். அதாவது இரண்டாவது உலகப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நாள் இன்றாகும் (நேற்று). எனவே, 2ஆம் உலகப்போரை முடிவுக்கு கொண்டுவருவதற்காக உயிர்த்தியாகம் செய்த படையினரை உலகம் நினைவுகூர்ந்து வருகின்றது.
இலங்கையில் பாசிசவாதத்தை தோற்கடித்த நாள் இன்னும் 9 நாள்களில் வருகின்றது. புலிகள் அமைப்பு என நாம் கூறும் தரப்பும் நாஜிவாத மற்றும் பாசிசவாத அமைப்பாகும். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வியட்நாம் விஜயத்தின்போது இராணுவத்தின் நினைவுத் தூபியில் மலரஞ்சலி செலுத்தினார். எனவே, இலங்கையில் பாசிசவாதம் தோற்கடிக்கப்பட்ட நாளையும் சிறப்பாக நினைவுகூர அவர் முன்வேண்டும் - என்றார். (அ-ம-44)

## வீடா?...

தேசியக் கூட்டணியின் ஆதரவு எந்தத் தரப்புக்குக் கிடைக்கின்றதோ அந்தக் கட்சியே ஆட்சியமைக்கும் என்ற நிலையே காணப்படுகின்றது. இதனால், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் தமிழ்த் தேசியப் பேரவையும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. இவ்வாறான பின்னணியிலேயே, விரைவில் தமது முடிவை அறிவிப்போம் என்று சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பாக நாங்கள் பெரும் சட்டப்போராட்டத்தை நடத்தவேண்டியிருந்தது. நீண்ட நீதிமன்ற நடவடிக்கையின் பின்னரே நாங்கள் தேர்தலில் போட்டியிட்டோம்.
எனவே, ஏனைய கட்சிகளுடன் ஒப்பிடும்போது எமது கட்சிக்கு பரப்புரைக்கான கால அவகாசம் மிகக்குறைவாகவே காணப்பட்டது. எனினும், மக்கள் எம்மீது நம்பிக்கை வைத்து பேரம்பேசும் சக்தியாக எங்களை மாற்றியிருக்கின்றனர். இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள முதல் 10 கட்சிகளுக்குள்ளும் வடக்கில் அங்கீகரிக்கப்பட்டுள்ள முதல் 5 கட்சிகளுக்குள்ளும் நாங்கள் இடம்பெற்றுள்ளோம். எங்களின் ஆதரவைப்பெற்று ஆட்சியமைப்பதற்காக பல தரப்பினரும் எம்மை அணுகுகின்றனர். ஆனால், நாங்கள் தமிழ்த் தேசியப் பேரவையுடனும், இலங்கைத் தமிழரசுக் கட்சியுடனும்தான் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். இந்த இரண்டு தரப்புகளில் ஒன்றைத்தான் ஆதரிப்போம் - என்றார். (அ-ம-125)

## புலிகளின்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பொதுத்தேர்தலில் வடக்கு மாகாணத்தில் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளை வைத்துக்கொண்டு, அது நல்லிணக்கத்துக்கான மிகப்பெரிய சமிக்ஞையென ஆளுங்கட்சி கூறியது. ஆனால் உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவுகளை எடுத்துக்கொண்டால், ஆளுங்கட்சியால் உருவாக்கப்பட்ட அந்த காதல்கதை போலியென்பது உறுதியாகியுள்ளது.
வடக்கில் பரப்புரை நடவடிக்கைக்காக பொதுத்தேர்தலின்போது முன்னெடுக்கப்படாத விடயங்கள்கூட, உள்ளூராட்சிசபைத் தேர்தலின்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் புலிகள் அமைப்பின் பாடலுக்கு நிகரான பாடலை உருவாக்கி, அதனைப் பகிர்ந்தார். உள்ளூராட்சி அதிகாரம் தமக்கு கிடைக்கப்பெற்றால் பிரபாகரனின் தாயின் பெயர் துறைமுகத்துக்கு வைக்கப்படும் என்றும் வல்வெட்டித்துறையில் பிரபாகரனுக்கு சிலை அமைக்கப்படும் என்றும்கூட தகவல்கள் பரப்பப்பட்டன.
இப்படியான கதைகளைக் கேட்டு, பாடலையும் செவிமடுத்தே வடக்கு மக்கள், தேசிய மக்கள் சக்தியை விரட்டியடித்துள்ளனர். பிரபாகரன் பல்லவியை பாடுவதற்கு தேசிய மக்கள் சக்தியைவிடவும் கைதேர்ந்தவர்கள் வடக்கில் உள்ளனர். மறுபுறத்தில் தமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாவிடின் தேசிய மக்கள் சக்தி மேலும் வீழ்ச்சியடைக் கூடும் என்ற எச்சரிக்கை வடக்கில் இருந்து விடுக்கப்பட்டுள்ளது என்பதாகவும் இதனை நாம் பார்க்கலாம் - என்றார். (அ-ம-44)

## தமிழ்க்...

களுள் ஒருவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.
உள்ளூராட்சிசபைகளில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைப்பதற்கு தமிழரசுக் கட்சி முயன்று வருகின்றது. இது தொடர்பில் கேட்டபோதே நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து செயற்படவேண்டும் என்பதனை மக்கள் தங்களின் வாக்குகள் மூலம் மிகவும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர். அதற்கேற்ப தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு நாங்கள் தயார் - என்றார். (அ-ம-125)

## சதுரங்க...

நாடளாவிய ரீதியில் நூற்றுக்கும் மேற்பட்ட சபைகளில் எந்தவொரு கட்சியாலும் ஆட்சியமைக்க முடியாத நிலையே காணப்படுகின்றது. இதையடுத்தே, ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய தரப்புகளை உள்வாங்கி ஆட்சியமைக்க பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நகர்வுகளை மேற்கொண்டுள்ளது.
அத்துடன், சில இடங்களில் சுயேச்சைகளுடனும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் நம்பகரமாகத் தெரியவருகின்றது. (அ-ம-44)

## விமானப்...

புறப்பட்ட ஹெலிகொப்டர், மாதுரு ஓயா இராணுவ விசேட படைத்தளத்தில் பயிற்சி நிறைவு அணிவகுப்பில், விளக்கப் பயிற்சியைக் காண்பிக்கச் சென்றபோதே இந்த விபத்து சம்பவித்துள்ளது.
விபத்து இடம்பெற்றபோது, ஹெலிகொப்டரில் இரு விமானிகள் உட்பட 12 பேர் இருந்தனர். அவர்களில் நான்கு இராணுவத்தினர் உட்பட ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். ஏனையவர்கள் காயங்களுடன் மீட்கப்பட்டு பொலனறுவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடம் என்றும் கூறப்படுகின்றது.
விபத்துத் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு விமானப் படைத் தளபதி தலைமையிலான 9 பேர் கொண்ட விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## என்.பி.பி.யுடன்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியுடன் (என்.பி.பி.) இணைந்து ஆட்சியமைப்பதற்குத் தமிழரசுக் கட்சி பேச்சுவார்த்தை நடத்துகின்றது என்று அண்மைக்காலமாகத் தகவல்கள் வெளிவருகின்றன. இவ்வாறாகப் பரப்பப்படும் தகவல்கள் எவையும் உண்மையில்லை.
வடக்கு - கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பெரும்பாலான சபைகளைக் கைப்பற்றியுள்ளது. கட்சி கம்பீரமாக மீண்டெழுந்திருக்கின்றது. தேர்தல் பரப்புரைக் காலத்தில், எமக்கு எதிராகக் கடும் விமர்சனங்களை முன்வைத்த தரப்புகள், தற்போது நாங்கள் தேசியக் கட்சிகளுடன் டீல் வைக்கின்றோம் என்று வதந்திகளைப் பரப்பி வருகின்றன. தேசிய மக்கள் சக்தியுடன் எந்த டீலும் வைக்கவில்லை. அவ்வாறான டீல்களை இனியும் வைக்கப்போவதில்லை.
கட்சியின் அடுத்தகட்ட செயற்பாடுகளுக்காக, தமிழரசுக் கட்சியின் அரசியற்குழுவினர் கூடி விரிவாகக் கலந்துரையாடவுள்ளோம். ரெலோ, புளொட் கட்சிகளின் தலைவர்கள், எமது கட்சியின் பொதுச்செயலாளருடன் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர். சிலர் கூட்டமைப்பாகச் செயற்படுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் - என்றார். (அ-ம-125)

## மாணவனை...

வனைக் கொடூரமாகத் தாக்கிய ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.
ஆசிரியரின் தாக்குதலுக்கு உள்ளான மாணவன், பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமையவே அந்த ஆசிரியர் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## மயக்கமடைந்து...

மதன்ராஜ் மனோஜ் (வயது-31) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
வெளியில் சென்றிருந்த குறித்த நபர், நேற்று நண்பகலளவில் வீட்டுக்குத் திரும்பியபோது மயக்கமுற்று விழுந்துள்ளார். இதையடுத்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அவரைக் கொண்டு சென்றபோது, அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகள் இன்றையதினம் மேற்கொள்ளப்படவுள்ளன. (அ-ம-100)

# சுகாதாரச் சீர்கேடு; வெதுப்பகத்துக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், மே 10

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய வெதுப்பகம் ஒன்றுக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தால் கடும் எச்சரிக்கையுடன் 50 ஆயிரம்ரூபாதண்டப்பணம்விதிக்கப்பட்டுள்ளது. மருத்துவச் சான்றிதழ் இல்லாமல் வெதுப்பகப் பொருள்களைக் கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, வெதுப்பகச்சுற்றாடலில் ஈக்கள் பெருக இடமளித்தமை, அழுகலடைந்த உருளைக்கிழங்குகளைக் களஞ்சியப்படுத்தியமை, வெதுப்பகப்பொருள்களுடன் தொற்று ஏற்படும் வண்ணம் இரசாயனப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் குறித்த வெதுப்பகத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-25,26)

## வரவேற்பாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல நகைக்கடை ஒன்றிற்கு வரவேற்பாளர் தேவை.

- வடமாகாணத்தைச் சேர்ந்த ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.
- வயதெல்லை கிடையாது.

தொடர்பு:- 076 658 0661

## வேலையாட்கள் தேவை

கொக்குவிலில் உள்ள பாடசாலை உபகரண விற்பனை நிலையத்திற்கு Typing, Photocopy தெரிந்த பெண்கள் வேலைக்குத் தேவை.

(CS/58200) J-1

தொடர்பு:- 072 078 9399

## மர தளபாட உற்பத்தியாளர்களுக்கு

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட தச்சுவேலை மெசின் (Wood working Machine) "Lida" ஒரிஜினல் 12" மற்றும் 10" Sliding இணைப்புடன் இப்பொழுது எம்மிடம். இதை ஒத்த போலிகள் தரம் குறைந்த மோட்டாருடன் சந்தையில் ஏமாந்துவிடாதீர்.



"நாங்கள் உங்களோடு"

ஆர்க் .என். கம்பனி

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803

## மூளாய்ப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா நாளை

யாழ்ப்பாணம், மே 10

மூளாய் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து நடைபெறவுள்ளது. மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழா இடம்பெறவுள்ளது. (ச)

## முழுநிலா அரங்கு

யாழ்ப்பாணம், மே 10

வடலியடைப்பு கலைவாணி கலைமன்றத்தினால் முழுநிலா அரங்கு நாளை இரவு 7:30 மணிக்கு வடலியடைப்பு கலைவாணி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

கலைநிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக சண் நாடகக்குழு தயாரித்து வழங்கும் காத்தவராஜன் கூத்து இடம்பெறவுள்ளது.

சித்திராப் பௌர்ணமியை சிறப்புடன் கொண்டாடும் முகமாக கலைவாணி கலைமன்றம் குறித்த நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தியுள்ளது. (ச-125)

## யாழ்ப்பாணம் பழம்வீதியில் உள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தின் மேற்கூரை எரிந்து சாம்பலானது!



யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம்வீதியில் அமைந்துள்ள, பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தின் மேற்கூரை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தீக்கிரையாகியுள்ளது.

பழம்வீதியில் உள்ள ஆலயமொன்றின் அலங்காரத் திருவிழா தற்போது இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இரவு, சுவாமி வெளிவீதியுலாவின் போது வானவேடிக்கைகள் இடம்பெற்றன என்றும், இதன் போதே தீப்பொறி பண்பாட்டு மலர்ச்சிக் கூட அரங்காலய மேற்கூரையில் பட்டு எரிந்துள்ளது என்றும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுள்ளன. (ம-27)

## மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 01 . 1962



மறைவு
08 . 05 . 2025

### தம்பிராசா அம்பலவாணர்

**(ஓய்வு நிலை அதிபர் யா/ மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி)**

தம்பகாமம் பளையைப் பிறப்பிடமாகவும், 614/B தண்ணீர்சால்மூட்டு வீதி, மட்டுவில் தெற்கு , சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா அம்பலவாணர் (ஓய்வு நிலை யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் அதிபர்) அவர்கள் நேற்றுமுன்தினம் (08.05.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் - பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும், கலைவாணி அவர்களின் அன்புக் கணவரும், கீதன் (ஜேர்மனி), கேதீஸ்சன், ஜதுஷனா (ஊவா வெல்லச பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், டிவ்யா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜயின் (ஜேர்மனி) அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், திருஞானசுந்தரம், திருநாவுக்கரசு மற்றும் கேதீஸ்வரநாதன், கந்தசாமி, விக்னேஸ்வரன் (ஆசிரியர், யா/ அத்தியார் இந்துக் கல்லூரி), மகேஸ்வரன், பிதாம்பரன் (நூலக உதவியாளர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை), இராசலட்சுமி (செயற்பாட்டு மகிழ்வோம் இணைப்பாளரும், முன்பள்ளி மேற்பார்வையாளரும், யா/தென்மராட்சி கல்வி வலயம்), யோகலட்சுமி (லண்டன்), அன்னலட்சுமி (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், முருகதாஸ் (ஜேர்மனி), ஜெயராணி (சுவிஸ்), மயில்வாகனசிங்கம் (ஆயுர்வேத வைத்தியர்), கேதீஸ்வரன் (லண்டன்), கருணா (இத்தாலி), காலஞ்சென்ற பார்வதி மற்றும் கமலாதேவி, சந்தானலட்சுமி, புஷ்பராணி (ஓய்வுநிலை ஆசிரியர்), இதயனி (ஆசிரியர் யா/ கடைக்காடு மகாவித்தியாலயம்), தர்சினி (ஆசிரியர், யா/கச்சாய் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக குச்சப்பிட்டி கைதடி, நுணாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

(CR/44971) J-1 077 452 7437

## மரண அறிவித்தல்

தோற்றம்
15 - 11 - 1952



மறைவு
08 - 05 - 2025

### குழந்தைவேலு இராசலிங்கம்

காரைநகர் பலகாடை பிறப்பிடமாகவும் காரைநகர் புதுறோட், இல 55/2, பழம் வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு இராசலிங்கம் நேற்று முன்தினம் (08.05.2025) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான முத்தையா சுப்பிரமணியம் செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜினி (அவுஸ்திரேலியா), சண்முகஜோதி (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையும், கிரிதரன் (அவுஸ்திரேலியா), தர்சினி (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், சிவஞானம், சரஸ்வதி, சவுந்தரம் மற்றும் இராமச்சந்திரன், கமலாதேவி, தவமணிதேவி, இராசலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரனும் வேலாயுதபிள்ளை, திருஞானசம்பந்தர், காலஞ்சென்ற அன்னலெட்சுமி, சிவஞானம், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் அபினேஷ், அபிநயா, அக்ஷயா, அக்ஷிதன், அக்ஷரா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (11.05.2025) காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைநகர் சாம்பல் ஓடை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இல 55/2 பழம் வீதி**
**கந்தர்மடம்**
**யாழ்ப்பாணம்**

**குடும்பத்தினர்.**
**மகன் - 0773126543**

(CS 58191) E-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.